28340

OL/2025(2026)/48/T-I,II

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

48 | T | I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

දෙමළ සාහිත්‍ය රසාස්වාදය I, II
தமிழ் இலக்கிய நயம் I, II
Appreciation of Tamil Literary Texts I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

சுட்டெண்: ..........................................

சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

..........................................
நோக்குநரின் கையொப்பம்

## அறிவுறுத்தல்கள் :

* வினாத்தாள் I, வினாத்தாள் II ஆகியவற்றுக்கு விடையளித்து, முழுநேரமும் முடிவடைந்த பின்னர் அவற்றை வேறுவேறாகக் கையளிக்கவும்.
* வினாத்தாள் I இற்குரிய விடையை இவ்வினாத்தாளிலேயே எழுதவேண்டும். இதற்காக வழங்கப்பட்டுள்ள இடத்தை மாத்திரம் பயன்படுத்தவும்.
* வினாத்தாள் II இற்கான விடையை எழுதுவதற்கு விடை எழுதும் புத்தகத்தைப் பயன்படுத்தவும்.
* வினாத்தாள் I இற்கு 40 புள்ளிகளும் வினாத்தாள் II இற்கு 60 புள்ளிகளும் உரித்தாகும்.

பரீட்சகர்களின் உபயோகத்திற்கு மட்டும்
வினாத்தாள் I

| வினா எண் | | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| மொத்தம் | இலக்கத்தில் | |
| | எழுத்தில் | |

| | |
|---|---|
| ..................... முதலாம் பரீட்சகர் | ..................... குறியீட்டு எண் |
| ..................... இரண்டாம் பரீட்சகர் | ..................... குறியீட்டு எண் |
| ..................... எண்கணிதப் பரிசோதகர் | ..................... குறியீட்டு எண் |
| ..................... பிரதான பரீட்சகர் | ..................... குறியீட்டு எண் |

[பக். 2 ஐப் பார்க்க

## தமிழ் இலக்கிய நயம் - வினாத்தாள் I

(எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளிக்குக.)

**1.** (i) தொடக்கம் (v) வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள விடயத்தை அடிப்படையாகக் கொண்டு கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குச் **சுருக்கமான விடை** எழுதுக.

(i) "தேன் நுகர் வண்டு மதுதனை உண்டு
தியங்கியே கிடந்ததைக் கண்டு
தான் அதைச் சம்புவின் கனி என்று
தடங் கையில் எடுத்துமுன் பார்த்தாள்."

(அ) இங்கு 'சம்பு' என்பது யாது?

............................................................

(ஆ) வண்டின் மயக்கத்திற்கான காரணம் யாது?

............................................................

............................................................

............................................................

(ii) "முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ..."

(அ) இங்கு 'கலிங்கம்' என்பது எதனைக் குறிக்கிறது?

............................................................

(ஆ) இப்பகுதியில் இடம்பெற்றுள்ள அணியினை இனங்கண்டு விளக்குக.

............................................................

............................................................

............................................................

............................................................

............................................................

(iii) "இன்றுவரை அம்மா
கதவுகளின் பின்னிருந்துதான்
அப்பாவோடு பேசுகிறாள்.
கடைசிவரை அப்பாவும்
மறந்தே போனார்
மனசுக்குள் தூரெடுக்க."

(அ) 'அம்மா கதவுகளின் பின்னிருந்துதான் அப்பாவோடு பேசுகிறாள்' என்ற அம்மாவின் செயற்பாடு பற்றிய விவரிப்பின் மூலம் கவிஞர் உணர்த்த முற்படும் விடயம் யாது?

............................................................

............................................................

............................................................

(ஆ) 'மனசுக்குள் தூர்' - இங்கு 'தூர்' என்பது எதனைக் குறிக்கின்றது?

............................................................

............................................................

............................................................

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

(iv) “பொன் வினைஞர்கள் பலர், பல திங்கள் கூடிச் செய்த பொற்சிலம்புகள் இவை. கவனத்தோடு பெறப்பட்ட மாணிக்கப் பரல்களால் ஆனவை. மூவேந்தர்தமது அரசியர்களிடம்கூட இத்தகைய சிலம்புகள் இருக்க முடியாது. மாநாய்க்கன் தன் மகளுக்கு அளிக்கும் அன்புப் பரிசுகள் இவை.”

(அ) மாநாய்க்கன் மகள் யார்?

.....................................................................................................................

(ஆ) அவளுக்குப் பரிசாக அளித்த பொற்சிலம்புகளின் சிறப்பு எவ்வெவ்வாறு விவரிக்கப்படுகின்றது?

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

(v) “மரங்கள் சாய்ந்தால் காட்டிலிருந்து வீட்டுக்கு வரும். மனிதன் சாய்ந்தால் வீட்டிலிருந்து காட்டுக்குப் போகிறான்... மனிதர்களுக்கு ஒரே ஒரு சிபி; ஒரே ஒரு சீதக்காதி. மரங்களில் எல்லாமே சிபிகள்; எல்லாமே சீதக்காதிகள்.”

(அ) ‘மனிதன் சாய்தல்’ என்பது எதனைக் குறிக்கிறது?

.....................................................................................................................

(ஆ) மரங்களை சிபிகள் என்றும், சீதக்காதிகள் என்றும் குறிப்பிடுவதன் மூலம் உணர்த்தப்படும் விடயம் யாது?

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

.....................................................................................................................

(4 × 5 = 20 புள்ளிகள்)

| |
|---|
| 20 |

**2.** கீழ்க்காணும் உரைப்பகுதியை **அல்லது** செய்யுட் பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

மனிதனாகப் பிறந்தவன் புகழீட்டியே தீரவேண்டுமென்றால் அதற்குரிய வழிகள் யாவை எனக் கேட்கத் தோன்றுகின்றதல்லவா? வழிகள் பலவாக இருக்கலாம். எந்த வழியை மேற்கொண்டால் புகழ் பேசுகின்றவர்கள் எளிமையாகப் புகழ்வார்கள்? அந்த வழியே சிறந்த வழி என்று நினைத்திருத்தல் கூடும் அக்கால மக்கள். மேலும் புகழ் ஈட்டும் வழியைப் பெறச்செய்யக்கூடுமாயின், அது மிகவும் நலமானதாகப்பட்டிருக்கும். இயற்கையாக மனதில் தோன்றும் வெறுப்புணர்ச்சிக்கு வடிவு கொடுப்பதன் மூலம் இரண்டு பயன்கள் கிட்டுகின்றன. முதலாவது, யாரை வெறுக்கின்றோமோ அவர்மேல் போர்தொடுத்து வெற்றி காணமுடிகின்றது. இரண்டாவது, அவ்வாறு பெறும் வெற்றியைப் பிறர் புகழவும் காரணமாகிறது.

இவ்வாறு இரண்டு வழிகளிற் பயன்பெறக் கூடுமாயின், வன்மை மிக்க அரசர்கள் ‘போர்’ என்ற வழியை மேற்கொண்டதில் வியப்பிருத்தல் இயலாது. மேலும் அந்த அரசர்கள் புரியும் இந்தப் போர்களைத் தம்முடைய நாட்டு மக்களின் நலத்திற்காகவே செய்ததாகவும் கூறினர்; அம்மக்களும் இதனை நம்பினர்.

[பக். 4 ஐப் பார்க்க

பிறருடைய நாட்டின்மேல் போர் தொடுத்துச் செல்லுதல் அரசர்க்குரிய அறமாகவும் போற்றிக் கூறப்பெற்றது. தற்காப்புச் செய்யுமுறையில் போரிடுதல் அன்றியும், பிறர்மேல் படைகொண்டு வலுப்போருக்குப் போதலும் அறமெனக் கருதப்பட்டது. புகழ் வேட்டையாடப் பிறருடைய நிலத்தைப்பற்றிக் கவலை கொள்ளாமல் போரிடுதலை ஒரு வாய்ப்பாகக் கொண்டனர் அற்றை நாள் தமிழர். எவ்வளவு பெரிய அரசனும் இதற்கு விலக்காமாறு இல்லை. மேலும் ஓரிரண்டு போர்களில் வெற்றி கண்டுவிட்டால் அது குடிப்பழக்கம்போல் ஆகிவிடும். அவ்வெற்றி தந்த வெறி மேலும் மேலும் போர் செய்யத் தூண்டும். தாம் இவ்வாறு போர் செய்து அதனால் பெறுவதாகக் கருதிய புகழ் உண்மையானதா என்று ஆராய அவர்கள் முற்படவில்லை.

(i) வெறுப்புணர்ச்சிக்கு வடிவு கொடுப்பதால் ஏற்படும் பயன்கள் எவையென ஆசிரியர் குறிப்பிடுகிறார்?

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

(04 புள்ளிகள்)

(ii) "வன்மை மிக்க அரசர்கள் 'போர்' என்ற வழியை மேற்கொண்டதில் வியப்பிருத்தல் இயலாது" என்பதற்கான காரணம் யாது?

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

(04 புள்ளிகள்)

(iii) அரசர்கள், பிறரது நாட்டின்மேல் தாம் போர் தொடுப்பது குறித்து முன்வைத்த நியாயங்கள் எவை?

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

(06 புள்ளிகள்)

(iv) போர்கள் மூலம் பெறப்படும் வெற்றியை ஆசிரியர் எதற்கு உவமிக்கிறார்? 'அந்த வெற்றி தந்த வெறி' என்ற உருவகம், அந்த உவமையோடு எவ்வாறு பொருந்தி வருகின்றது?

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

(06 புள்ளிகள்)

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



அல்லது

நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்.

மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று.

முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேல் உண்கண் வேய்த்தோ ளவட்கு.

காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாண்இழை கண் ஒவ்வேம் என்று.

அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை.

மதியும் மடந்தை முகனும் அறியா
பதியின் கலங்கிய மீன்.

அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறு உண்டோ மாதர் முகத்து.

மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி.

மலர் அன்ன கண்ணாள் முகம் ஒத்தியாயின்
பலர்காணத் தோன்றல் மதி.

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்.

(i) தலைவியின் மேனி, பல், வாசனை, தோள் என்பவை எவ்வெவ்வாறு விவரிக்கப்படுகின்றன?

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

(04 புள்ளிகள்)

(ii) தலைவியின் நலம் புனைந்து உரைப்பதற்கு 'அனிச்சம் பூ' கையாளப்பட்டிருக்கும் பாங்கில் காணத்தகும் நயங்களைத் தெளிவுபடுத்துக.

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

[பக். 6 ஐப் பார்க்க

..................................................................................................................................................

..................................................................................................................................................

(04 புள்ளிகள்)

(iii) தலைவியின் கண்ணழகு எவ்வெவ்வாறு விவரிக்கப்படுகின்றது?

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

(06 புள்ளிகள்)

(iv) தலைவியின் முக அழகை மதியோடு தொடர்புபடுத்திக் கூறும் பாங்கில் காணத்தகும் நயங்களை விவரிக்குக.

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

(06 புள்ளிகள்)

20

**

PAST PAPERS WIKI

[பக். 7 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

48 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2025(2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2025(2026)
General Certificate of Education (Ord. Level) Examination, 2025(2026)

දෙමළ සාහිත්‍ය රසාස්වාදය I, II
**தமிழ் இலக்கிய நயம் I, II**
Appreciation of Tamil Literary Texts I, II

## தமிழ் இலக்கிய நயம் - வினாத்தாள் II

※ பகுதி **II** இல் **1 ஆம் வினாவுக்கும்,** ஏனைய **2, 3, 4, 5** ஆகிய வினாக்களுள் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்குமாக, மொத்தம் **மூன்று** வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.
※ தரப்படும் விடைப்புத்தகத்தில் விடைகளை எழுதி, வேறாகக் கையளிக்கவும்.
※ பகுதி **II** இற்கு **60** புள்ளிகள் வழங்கப்படும்.

**1.** பின்வரும் கவிதைப் பகுதியை வாசித்து, அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வழிகாட்டற் குறிப்புகளின் அடிப்படையில் கவிதையை நயந்து குறைந்தபட்சம் 200 சொற்களில் எழுதுக.

காலையிலே பனி காயுமுன்னே குளிர்
காற்றைக் கிழித்துமே ஓடுகின்றோம்! - தொழிற்
சாலையிலே சங்கு ஊது முன்னே பசுந்
தங்கத் தளிரினை கிள்ளிடுவோம்!

வெண்டை விரல்கள் விறைத்திடினும் எங்கள்
மேனி குளிரில் நடுங்கிடினும் - இரு
கெண்டை விழிகள் பளபளக்கும், தளிர்
கிள்ளவோ கைகள் பரபரக்கும்!

கூடை அசைந்து பக்கத்திலும் வந்து
கூட்டும் 'கிறுக் கிறுக்' கோசையிலே - நெஞ்ச
மேடையிலே சதி ராடுமெண் ணங்களின்
வேதனை துன்ப ஒலிகேட்கும்!

பக்க நிரைச்செடி சிக்கிடும் போதிலும்
பக்குவ மாகவி லக்கிச் செல்வோம் - எம்மைச்
சிக்கவைத் திருக்கும் அடிமைத் தளையினை
தூக்கி யெறியத் துணிவு கொள்வோம்!

வெட்டிய செடியில் புடைத்தெழும் அரும்பென
மேலுறும் எண்ணம் எங்கள் மனதில் - இனி
முட்டித் ததும்பி முளைத்து விடும் எம்மை
மூடிய பேரிருள் ஓட்டிடுவோம்!

என்றும் அடிமைச் சிறையினி லேவைத்த
எத்தர்கள் கொட்ட மடக்கிடவே - பெருங்
குன்று நிகர்த்த மனவுறுதி கொண்டு
கோதையர் போரிட முன்வருவோம்!

பெண்ணுக்கு கல்வி பெருந்தீது, உரிமை
பேசிடி லோஅது பெருந்தவறு - என்ற
எண்ணம் படைத்தவர் மண்ணிற் புதைந்திட
எண்ணற் கரிய கலைபடைப்போம்!

சாதிச் சமய சங்கறுத்து, பெண்கள்
தாழ்வுயெனும் தீய போக்கொழித்து - இம்
மேதினி யில்புது மாற்றம் படைத்து பெண்
விடுதலைக் கீதம் இசைத்திடுவோம்!

[பக். 8 ஐப் பார்க்க

(i) மலையகச் சூழலும் சுவாத்தியமும்
(ii) அவற்றின் மத்தியில் தொழில் செய்யும் பெண்கள் எதிர்கொள்ளும் துன்பங்கள்
(iii) அப்பெண்கள் மீதான ஒடுக்குமுறையும் அதற்கு எதிரான அவர்களின் போராட்ட மனநிலையும்
(iv) கையாளப்பட்டுள்ள உவமைகளும் அவற்றில் காணத்தகும் நயங்களும்
(v) பின்வரும் தொடர்களில் காணத்தகும் நயங்கள்
(அ) நெஞ்ச மேடை
(ஆ) சதிராடும் எண்ணங்கள்
(இ) எம்மை மூடிய பேரிருள்
(ஈ) அடிமைச் சிறை
(உ) சாதிச்சமயச் சங்கறுத்து
(ஊ) பெண் விடுதலைக் கீதம் இசைத்திடுவோம்

(5 × 6 = 30 புள்ளிகள்)

**2.** கானல் வரியில்,
(i) சோழ மன்னனின் சிறப்பு
(ii) காவேரியின் ஓட்டம்
என்பன வெளிப்படுத்தப்படும் வகையினை விளக்குக.

(15 புள்ளிகள்)

**3.** தலைவனுக்காகத் தலைவி உணவு சமைத்த முறைமையின் அடிப்படையில் தலைவன் மீதான அவளது அன்பின் சிறப்பு,
(i) **முளிதயிர் பிசைந்த...**
(ii) **தங்க வளைக் கைகள்...**
ஆகிய பாடல்களில் வெளிப்படும் வகையினை விளக்குக.

(15 புள்ளிகள்)

**4.** **வஞ்சியர்காண்டம்** நாடகத்தில்,
(i) கண்ணகி பற்றி ஐயையும்
(ii) மாதவி பற்றிக் கண்ணகியும்
கொண்டிருந்த மதிப்புணர்ச்சி வெளிப்படுமாற்றினை விளக்குக.

(15 புள்ளிகள்)

**5.** **தெளிவு** சிறுகதையில்,
(i) பாத்தும்மா
(ii) மைமூன் ஆச்சி
ஆகிய பாத்திரங்களின் மனநிலை வெளிப்படுத்தப்படுமாற்றைத் தெளிவுறுத்துக.

(15 புள்ளிகள்)

* * *

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න